# முத்தமிழ் வளர்த்த முனிவர்

## M.A.V மதுஸூதனன்

"சொல்லார் தமிழொரு மூன்றும் சுருதிகள் நான்கும் எல்லையில்லா அறநெறி யாவும் தெரிந்தவன்" என்று எம்பெருமானாரை அமுதக்கவியான அமுதனார் கொண்டாடுகிறார். ஸ்வாமி ஸ்ரீபாஷ்ம் முதலிய ஸம்ஸ்க்ருத நூல்களை மட்டுமே அருளிச்செய்துள்ளார். ஆயினும் அவர் முத்தமிழ் அறிஞராகவும் விளங்கினார் என்பதை குருபரம்பரை நூல்கள் மூலமாகவும், திவ்யப்ரபந்த வ்யாக்யானங்களில் காணும் பல்வேறு ஐதிஹ்யங்கள் மூலமாகவும் நாம் அறியலாம். இயல் தமிழ், இசைத்தமிழ் மற்றும் நாடகத்தமிழ் ஆகிய முத்தமிழிலும் தாம் வல்லுநராக இருந்ததோடு மட்டும் அல்லாமல் அவைகளை வளர்க்கவும் பல வழிகளை வகுத்தார். எம்பெருமானாருக்கு பின்னர் அவதரித்த பட்டர், நஞ்சீயர், நம்பிள்ளை முதலான ஆசார்யர்கள் தமிழ் இலக்கண இலக்கியங்களில் ஒப்பற்ற பாண்டித்யத் துடன் விளங்கி, தமிழர்கள் (தமிழ் இலக்கியங்கள் மட்டும் கற்றவர்கள்) கேட்ட பல கேள்விகளுக்குத் தமிழ் இலக்கண இலக்கியங்களை கொண்டே விடை அளித்து அவர்களை வாய் மாளச் செய்துள்ளனர். மேலும் எம்பெருமானா ருக்குப் பின்னர் வந்த ஆசார்யர்கள் பலர் உயர்ந்த கருத்துக்களை எளிய தமிழ்ப் பாசுரங்களாக நமக்கு அருளியுள்ளனர். எம்பெருமானாருடைய நேர்ச் சீடரான அருளாளப்பெருமாள் எம்பெருமானார் வேதாந்தக் கருத்துக்களை, ஞான சாரம், ப்ரமேய சாரம் ஆகிய எளிய தமிழ் ப்ரபந்தங்கள் மூலம் விளக்கியுள்ளார். எம்பெருமானாரின் புனரவதாராமான மணவாள மாமுனிகள் நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி யின் ஆழ்ந்த கருத்துக்களை விளக்கி எளிய தமிழில் வெண்பாப்பாடல்களாக திருவாய்மொழி நூற்றந்தாதி என்கிற அற்புதமான பிரபந்தத்தை நமக்காக அருளிச்செய்துள்ளார். இப்படி ஆசார்யர்கள் பலர் தமிழுக்குச் செய்த தொண்டுகள் அனைத்திற்கும் வித்திட்டவர் ஸ்வாமி எம்பெருமானாரே ஆவார்!

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழிக்குப் பல தனியன்கள் அவதரித்துள்ளன. அதில் ஒன்று - "ஏய்ந்த பெருங்கீர்த்தி இராமானுச முனிதன் வாய்ந்த மலர்ப்பாதம் வணங்குகின்றேன் ஆய்ந்தபெருஞ் சீரார் சடகோபன் செந்தமிழ் வேதம் தரிக்கும் பேராத உள்ளம் பெற" என்பது. திருமலை அனந்தாழ்வான் அருளிய இத்தனியன் திருவாய்மொழியை தம் நெஞ்சில் தரிக்க எம்பெருமானாரை பிரார்த்திக்கும் விதமாக அமைந்துள்ளது. இங்கு ஒரு கேள்வி எழுகிறது. இந்தப் பிரார்த்தனை யாரைக் குறித்துச் செய்திருக்க வேண்டும்? திருவாய்மொழியை அருளியவரான ஆழ்வாரைக் குறித்து செய்திருக்கலாம். அல்லது ஆழ்வாரின் அந்தரங்க சீடர்களான மதுரகவிகள் திறத்திலோ நாதமுனிகள் திறத்திலோ செய்திருக்கலாம். அல்லது பரமகாருணிகனான ஸர்வேச்வர னைக் குறித்தோ பெரியபிராட்டியாரைக் குறித்தோ செய்திருக்கலாம். இவர்கள் திறத்தில் செய்யாமல் அனந்தாழ்வான் இப்பிரார்த்தனையை எம்பெருமனார் திருவடிகளில் செய்ததன் காரணம் என்ன என்று நாம் ஆராயவேண்டும். பராசர பட்டர் அருளிய அடுத்த தனியனில் "தமிழ்மறைகள் ஆயிரமும் ஈன்ற முதல் தாய் சடகோபன் மொய்ம்பால் வளர்த்த இதத்தாய் இராமானுசன்" என்று விடையைத் தெள்ளத் தெளிவாக நமக்குக் காட்டியுள்ளார். திருவாய்மொழியை ஈன்ற தாய் ஆழ்வார் என்றும் வளர்த்த தாய் எம்பெருமானார் என்றும் காட்டியுள்ளார். அது காரணமாகவே திருவாய்மொழியும் அதன் அர்த்த விசேஷங்களும் தம் நெஞ்சில் நிலைக்கவேண்டி வளர்த்த தாயான எம்பெருமானாரைப்

ப்ரார்த்தித்தார் அனந்தாழ்வான். திருமங்கை ஆழ்வாரின் பெரிய திருமொழித் தனியன்களில் "எங்கள் கதியே இராமானுச முனியே சங்கை கெடுத்தாண்ட தவராசா பொங்கு புகழ் மங்கையர் கோன் ஈந்த மறையாயிரம் அனைத்தும் தங்கு மனம் நீ எனக்குத் தா" என்கிற தனியனும் இதே கருத்தை உணர்த்துகிறது என்பதும் இவ்விடத்தில் குறிகொள்ளத் தக்கது.

வேதாத்யாயனம் மட்டும் செய்திருந்தவர்களையும் திவ்யப்ரபந்தங் களைக் கற்கும்படி நியமித்து அருளியவர் எம்பெருமானார். மேலும் அவர்களைக் கொண்டே திருக்கோயில் திருவிழாக்களில் திவ்யப்ரபந்தங்களை ஓதவைத்து வேதம் எவ்வாறு போற்றப்பட்டதோ அதே ஏற்றத்தை அருளிச்செயல்களுக்கும் கொடுத்தருளினார். திவ்யதேசங்களில் அருளிச்செயல் இன்றி ஒரு பூஜையும் இல்லை என்று சொல்லும் அளவிற்கு எந்த ஒரு வைதிகச் சடங்கிலும் அருளிச்செயல் ஓதுவதை ஒரு அங்கமாக ஆக்கினார். மேலும் செந்தமிழ் பாடுவார்களான ஆழ்வார்களுக்கு விக்கிரஹங்களை அனைத்துத் திருக்கோயில்களில் பிரதிஷ்டை செய்வித்து அவர்களுக்கு திருநக்ஷத்திரம் முதலான வைபவங்களைச் சிறப்பாக நடத்த வழிவகுத்தார்.

ஆளவந்தாரின் முக்குறைகளில் ஒன்று ப்ரஹ்மஸூத்ரத்திற்கு பாஷ்யம் இயற்றவேண்டும் என்பது. எம்பெருமானார் மிகவும் சிரமப்பட்டு காஷ்மீரம் வரை சென்று போதாயன வ்ருத்தி க்ரந்தத்தை சேவித்து ஆழ்வானின் துணைகொண்டு ஸ்ரீபாஷ்யம் இயற்றி முடித்தார். அப்போது சிஷ்யர்கள் சிலர் ஸ்வாமியிடம் திருவாய்மொழிக்கும் ஒரு வ்யாக்யானம் இயற்றுமாறு பிரார்த்தித்தனர். அதற்கு ஸ்வாமி திருவாய்மொழிக்கு தாம் ஒரு வ்யாக்யானம் இயற்றினால் அதற்குப் பிறகு வேறு யாரும் மற்றொரு வ்யாக்யானம் இயற்றத் துணிய மாட்டார்கள் என்று எண்ணினார். எம்பெருமானுடைய குணங்களை பரிபூரணமாக அனுபவித்த ஆழ்வாரின் திருவாய்மொழிக்கு பல வ்யாக்யானங்கள் தோன்ற வேண்டும் என்றுத் கூறி தாம் வ்யாக்யானம் இயற்ற மறுத்துத் தம்முடைய சிஷ்யரான திருக்குருகைப் பிரான் பிள்ளானை மணிப்ரவாளத்தில் ஒரு சிறு வ்யாக்யானம் இயற்றுமாறு நியமித்தார். மேலும் பின்னர் வரும் ஆசார்யர்களும் அவ்வப்போது வ்யாக்யானங்கள் இயற்றலாம் என்றும் நியமித்தருளினார். அதுவரை ஸம்ஸ்க்ருத வேதாந்தம் என்றும் த்ராவிட வேதாந்தம் என்றும் இரண்டு கிளைகளாக விளங்கியவைகளை பின்னிப்பிணைந்து உபயவேதாந்தம் என்று ஆக்கியருளினார். உபயவேதாந்த ப்ரவர்த்தனம் மூலம் ஸம்ஸ்க்ருத வேதாந்தம் மட்டும் கற்றவர்களை தமிழ் வேதாந்தத்தையும் கற்கவைத்தார். ஆக, ஸ்வாமி ஒருபுறம் ஸ்ரீபாஷ்யம் முதலிய நூல்களை இயற்றி ஸம்ஸ்க்ருத வேதாந்தத்தை வளர்த்தார்; மற்றொருபுறம் திருவாய்மொழிக்கு வ்யாக்யானங்கள் இயற்றச் செய்து வளர்த்தார் என்றால் மிகையாகாது.

எம்பெருமானார் அருளிச்செய்த க்ரந்தங்கள் அனைத்துமே ஸம்ஸ்க்ருதத்தில் இருந்தாலும் அவை அனைத்திற்கும் மூலம் ஆழ்வார்களின் ஈரச்சொற்களே என்பது திண்ணம். "பாஷ்யகாரர் இதுகொண்டு சூத்ர வாக்யங்கள் ஒருங்கவிடுவர்" என்கிற ஆசார்ய ஹ்ருதய சூத்திரத்தில் இவ்விஷயம் மூதலிக்கப்பட்டது. மேலும் எம்பெருமானாருடை ய பல்வேறு க்ரந்தங்களில் காணப்படும் ஸ்ரீஸூக்திகள் அருளிச்செயல்களை அடியொற்றியே அவதரித்தன என்பதையும் பலபல உதாரணங்களைக் கொண்டு விளக்கி காஞ்சி ஸ்வாமி "த்ரமிடோபநிஷத் ப்ரபாவ ஸர்வஸ்வம்" என்கிற நூலில் காட்டியுள்ளார்.

எம்பெருமானார் திருவாய்மொழிக்கு வ்யாக்யானம் அருளிச்செய்யவில்லை என்றாலும் அதன் வ்யாக்யானமானது எப்படி இருக்கவேண்டும் என்பதை பல நிர்வாஹங்கள் மூலம் காட்டியுள்ளார். ஆளவந்தாரின் சீடரான திருமாலை ஆண்டானிடம் ஸ்வாமி திருவாய்மொழி காலக்ஷேபம் கேட்டார். அப்போது ஆசார்யன் சொன்ன அர்த்தத்தை விட அற்புதமான அர்த்தத்தை ஸ்வாமி சாதிப்பார். ஸ்வாமி காட்டிய நிர்வாஹங்கள் ஆழ்வாருடைய தன்மையையும் திருவுள்ளத்தையும் உள்ளபடி அறிந்தும்

அந்தந்த ப்ரகாரணத்திற்கு சேரவும் இருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திருவாய்மொழி முதல் பாசுரத்தில் "துயரறுசுடரடி" என்று எம்பெருமானுடைய திருவடிகளை அருளிச்செய்கிறார் ஆழ்வார். அடியவர்களுடைய துயரங்களைப் போக்கும் திருவடி என்று முற்பட்ட ஆசார்யர்கள் விளக்கம் அளித்தனர். "அடியவர்களின் துயரை போக்குவதால் தான் துயர் அறும் திருவடி" என்று ஸ்வாமி விளக்கினார். ஆழ்வாருடைய துன்பங்களுக்கு காரணமான மயர்வைத் தீர்த்து, எம்பெருமான் தன் துயரறப் பெறுகிறான் என்பது ஸ்வாமியின் கருத்து.

திருவாய்மொழி இரண்டாம் பத்தில் மூன்றாவது திருவாய்மொழியில் "அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து அறியா மாமாயத்து அடியேனை வைத்தாய் ஆல்!" என்கிற மூன்றாவது பாசுரத்தை விளக்கிக் கொண்டிருந்தார் ஆண்டான். அப்போது ஆளவந்தார் அருளிச் செய்த பொருளாகத் திருமாலையாண்டான் கூறியதாவது: 'அறிவு நடையாடாத சிறு பிராயத்திலேயே அடியேனுக்கு மெய்யறிவைத் தந்து உனக்குத் தொண்டு செய்வதில் விருப்பத்தை உண்டாக்கி, பின்னர் அந்த மெய்யறிவை அழிக்கக் அடைவதான இந்த உடலோடு என்னைச் சேர்த்து வைத்தாயே என்று வருத்தத்தோடு ஆழ்வார் அருளிச் செய்கிறார்' என்று பாசுரத்தில் உள்ள சொற்களை உள்ளபடியே அன்வயித்து திருமாலை ஆண்டான் அருளிச் செய்த இப்பொருளைக் கேட்ட எம்பெருமானார், 'இத்திருவாய்மொழியில் ஆழ்வார் இப்பாசுரத்திற்கு முன் அருளிச்செய்த பாசுரங்களிலும், இப்பாசுரத்திற்குப் பின் அருளிச்செய்த பாசுரங்களிலும் தம்முடைய மகிழ்ச்சியையே வெளியிட்டிருக்கிறார். (இதற்கு முன் பாசுரத்தில் 'அறியாதன அறிவித்த அத்தா' என்றும், இதற்கடுத்த பாசுரத்தில் 'எனதாவியுள் கலந்த பெருநல்லுதவி' என்றும் எம்பெருமான் தமக்குச் செய்துள்ள உபகாரங்களை மகிழ்ச்சியுடன் கொண்டாடியுள்ளார் ஆழ்வார்.) எனவே நடுவேயுள்ள இப்பாசுரத்தில் மட்டும் ஆழ்வார் வருத்தத்தோடு அருளிச் செய்கிறார் என்று கூறுவது பொருந்தாது. (எனவே பாசுரத்தில் உள்ள சொற்களை மாற்றி அந்வயித்து) அறியா மாமாயத்து அடியேனை (அறிவுகேட்டை விளைக்கும் சம்சாரத்திலே உழல்கின்ற என்னை) அறியாக் காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்தாய் ( அறிவு நடையாடாத இளம் பருவத்திலேயே அடிமை செய்வதி அன்புடையவனாக ஆகும்படி செய்தாயே) என்று இதையும் எம்பெருமான் செய்த உபகாரமாக ஆழ்வார் மகிழ்ச்சியுடன் கூறுகிறார் என்று பொருள் கூறினார். ('ஆல் என்ற அசை நிலையை வருத்தப் பொருளில் ஆண்டான் அருளிச்செய்தார். எம்பெருமானார் அதையே மகிழ்ச்சிப் பொருளில் அருளிச்செய்தார்.

இப்படியே காலக்ஷேபம் நடந்து கொண்டிருக்கும் போது ஆறாம் பத்தில் முதல் திருவாய்மொழி பாசுரத்தில் ஒரு அற்புதமான உரையாடல் நடந்தது. "வைகல் பூங்கழிவாய்" என்கிற திருவாய்மொழி ஆழ்வார் சக்ரவர்த்தித் திருமகனிடம் பறவைகளை தூது விடுவதாக அமைந்துள்ளது. இதில் பத்தாவது பாசுரம் "மாறில் போரரக்கன் மதிள் நீறெழச் செற்றுகந்த, ஏறுசேவகனார்க்கு என்னையும் உளள் என்மின்களே" என்பது. தன்னைப் பிரிந்தவர்கள் எவரும் உயிருடன் தரித்து இருக்கமாட்டார்கள் என்று கருதியே எம்பெருமான் மீண்டும் வரவில்லை. ஆனால் அவனைப்பிரிந்த நான் ஒருத்தி உயிருடன் இருக்கிறேன் என்பதை அவனுக்குச் சொல்லுங்கள் என்கிறார் பராங்குச நாயகி என்று ஆளவந்தார் அருளிச் செய்ததாக திருமாலை யாண்டான் கூறினார். எம்பெருமானார் இதைக் கேட்டு, "இப்பொருள் அழகியதுதான்; ஆயினும் உத்தம நாயகனும் நாயகியும் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்து வெவ்வேறு இடங்களில் இருந்தாலும் ஒருவர் இறந்து விட்டால், மற்றொருவர் அதை அறியாவிட்டாலும் அவர்களுடைய உயிர் பிரிந்து விடும். இதைத் தமிழர்கள் 'இன்றியமையாமை' என்பர். எம்பெருமான் தான் உளனாகையால், நாயகியும் உளள் என்பதை அறிந்தே இருப்பன். அவன் (வாலி, ராவணன் முதலிய) விரோதிகளை அழித்து, (ஸுக்ரீவன், விபீஷணன் முதலிய)

அடியவர்களுக்கு முடிசூட்டி, செய்ய வேண்டிய செயல்களையெல்லாம் செய்து விட்டோம்; இனிச் செய்ய வேண்டுவது ஒன்றுமில்லை என்று நினைத்திருக்கிறான். அவனிடம் சென்று இன்னும் அவனால் காப்பாற்றப்பட வேண்டியவள் நான் ஒருத்தி இருக்கிறேன் என்பதைப் போய்ச் சொல்லுங்கள் என்கிறாள் பராங்குச நாயகி என்று பொருளுரைத்தார்! (மாறில் போரரக்கன் மதிள்நீறெழச் செற்று உகந்த ஏறுசேவகனார் என்று இப்பாசுரத்தில் உள்ள அடிகளைக் கருத்தில் கொண்டு, எம்பெருமானார் இவ்வாறு அருளிச்செய்தார்.) எம்பெருமானார் இயல் தமிழுக்குச் செய்த தொண்டாக நாம் இவற்றைக் கொள்ளலாம்.

ஸ்வாமி பெருமாள் திருமொழிக்கு "இன்னமுதம் ஊட்டுகேன்" என்கிற தனியனும், பெரிய திருமொழிக்கு "வாழி பரகாலன்" என்கிற தனியனும் அருளிச்செய்துள்ளார். ஸ்வாமி இவ்வளவு சிரத்தையுடன் அருளிச்செயல்களை வளர்க்கவில்லை என்றால் எப்படி ஆழ்வார்கள் காலத்திற்குப்பின் அவைகள் மறைந்தனவோ அதே போல் மறுபடியும் மறைந்திருக்கும். "ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா" என்று நாம் நாள் தோறும் ஓதி வருவது திவ்யப்ரபந்த விஷயம் அன்றி வேறில்லை என்பது உணரலாகிறது.

ஸ்வாமி இசைத்தமிழை வளர்க்கவும் பல வழிமுறைகளை செய்தருளினார். அதில் முக்கியமான ஒன்று ஸ்வாமி திருவரங்கம் அரையர் கலையை வளர்த்தது. நாதமுனிகள் காலம் தொடங்கி திருவரங்கத்தில் இசையோடு கூடிய அரையர் சேவை நடந்து வந்தாலும் எம்பெருமானார்தாம் அந்த கைங்கர்யத்தை மேலும் பொலிவுரச் செய்தார். நம்பிள்ளை அருளிச்செய்த திருவாய்மொழி ஈடு வ்யாகனத்தில் பல இசைக்குறிப்புகள் இடம் பெற்றுள்ளமையை இசைவல்லுனர்கள் காட்டியுள்ளனர். இவை அனைத்தும் எம்பெருமானாரிடம் இருந்து வந்தவையே ஆகும். திருவரங்கத்தில் பல சந்தர்ப்பங்களில் எம்பெருமான் திருமுன்பே வீணை இசையோடு அருளிச்செயல்கள் பாடப்படுகின்றன. இந்த வழிமுறையும் அவர் ஏற்படுத்தியது என்றே கூறுகின்றனர்.

நாடகத்தமிழுக்கும் எம்பெருமானார் ஆற்றியுள்ள தொண்டு அளப்பரியது. ஆழ்வார்களுடைய பாசுரங்களில் மிகவும் ஈடுபாடு உடையவரான எம்பெருமானார் அரையர் சேவைகள் நடைபெறும்போது அரையர்கள் செய்யும் அபிநயங்களையும் கூர்ந்து கவனித்து, பல இடங்களில் திருத்தங்களும் காட்டியிருக்கிறார். ஒருமுறை வாசுதேவன் வலையில் தாம் அகப்பட்டதாக நம்மாழ்வார் அருளிச்செய்துள்ள திருவாய்மொழிப் பாசுரத்திற்கு (5-3-7) அபிநயம் செய்த ஆழ்வார் திருவரங்கப் பெருமாள் அரையர், வலை என்பதற்கு கைகளால் வலை போல் அபிநயம் செய்து காட்டினார். இதைக் கண்ட எம்பெருமானார், எம்பெருமான் தன்னுடைய திருக்கண் நோக்கத்தினாலேயே ஆழ்வாரை வசப்படுத்தியமையால், ஆழ்வார் வலை என்றது எம்பெருமானுடைய திருக்கண்களையே என்பதை தெரிவிக்கும் வகையில் வலை என்று திருக்கண்களைக் காட்டியருளினார். எம்பெருமானாரின் குறிப்பை கவனித்த அரையர் அடுத்த முறை வலை என்பதற்கு தம் திருக்கண்களை காட்டினார். ஒருமுறை அரையர் நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும் (திருவாய்மொழி 5-10-6) என்று பாடிய போது எம்பெருமானார், 'இவையெல்லாம் கண்ணபிரான் தொட்டிலிலே செய்தவை' என்றாராம். எம்பெருமானாரை அடியொற்றிப் பின் வந்த ஆசார்யர்களும் இதே போல அபிநயங்களில் பல திருத்தங்களை காட்டி அக்கலைக்கு மேலும் பெருமை சேர்த்தனர். திருவரங்கம் அரையர் சேவையில் பாசுரங்கள் அபிநயங்களை தவிர ஸமுத்ர மதனம், ஹிரண்ய வதம், கம்சவதம், முத்துக்குறி போன்ற பல சரித்திரங்கள் அழகிய மணவாளன் திருமுன்பே அரையர்களால் நாடகமாக நடத்தப்படுகின்றன. இவையும் எம்பெருமானார் நியமனம் என்றே கூறப்படுகிறது.

இவ்வாறு, எம்பெருமானார் திவ்ய ப்ரபந்தங்களைக் கொண்டே முத்தமிழையும் வளர்த்தபடியால்தான் அமுதனார் அவரை 'சொல்லார் தமிழ் ஒருமூன்றும் .... தெரிந்தவன் - இராமானுசன் என்று போற்றியுள்ளார்.